இத்தகைய தடங்கல்கள் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. தற்போது இச்சிக்கல் எந்த அளவுக்குத் தீர்க்கப்பட்டிருக்கிறது, எப்போது அந்தப் பள்ளிக் கட்டிடம் கட்டிமுடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தகட்டூரில் உள்ள அருட்திரு வைரவநாத சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தில் இந்தப் பணி இருக்கிறது. இந்தப் பள்ளிக் கட்டிட நிதிக்காக ரூ. 14,500-க்கான காசோலையை அறங்காவல் குழு கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியின் முத்துப்பேட்டைக் கிளை மூலம் கொடுத்தது. ஆனால் அதை மாற்றி மாநில வங்கியின் தஞ்சைக் கிளைக்குத் தரும்படி கேட்டு அக்காசோலை அறங்காவல் குழுவிற்குத் திருப்பியனுப்பப்பட்டது. ஆனால் அக்காசோலை மீண்டும் மாற்றியனுப்பப்படவில்லை. இது குறித்து, பள்ளிக் கல்வி இயக்குநர் இந்து சமய அறநிலையத் துறையோடு தொடர்பு கொண்டிருக்கிறார்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அறங்காவல் குழுவினிடமிருந்து சேர வேண்டிய தொகையான ரூ. 14,500 இதுவரை பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கான பணிக்கு எதுவாகக் கிடைக்கவில்லை என்று சொல்லப்பட்டது. இதன் காரணமாக அப்பள்ளிக் கட்டிடம் கட்டும் பணி தடங்கலுக்குள்ளாகி இருப்பதால், இதைத் தவிர்க்கும் வகையில் அரசே தன்னுடைய நிதியிலிருந்து இந்தத் தொகையை முதலில் அளித்துப் பிறகு திரும்பப் பெற முன்வருமா ? அதன் மூலம் கட்டிடம் கட்டுவதற்கு அரசு உதவி செய்யுமா ? அரசு இதில் எந்த நடவடிக்கையை மேற்கொள்ள இருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசே தன்னுடைய நிதிப் பொறுப்பிலிருந்து கட்டிடத்தைக் கட்டித் தருவதென்றால், அதற்கென்று சில பிரையாரிட்டிகள் இருக்கின்றன. அதைப் பொறுத்துத்தான் அவ்வாறு செய்ய முடியும். இந்தப் பள்ளிமட்டும்தான் அப்படிப்பட்ட நிலையில் இருக்கிறது என்பதல்ல. பிரையாரிட்டி கொடுப்பதற்கு பல முறைகள் இருக்கின்றன. ஆயினும் இந்தப் பள்ளிக் கட்டிடத்தைப் பொறுத்த வரையில், இதை விரைவில் கட்டி முடிக்க மாற்று நடவடிக்கைகளை எடுக்க அரசு முயற்சி செய்யும்.

தந்தை பெரியார் மற்றும் அறிஞர் அண்ணா பற்றிய நூல்கள்

154 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோருடைய வாழ்க்கை வரலாறு நூல்கள் மற்றும் அவர்களுடைய கொள்கைகள், பேச்சுக்கள் அடங்கிய நூல்கள் அனைத்தையும் அனைத்துப் பள்ளிகளுக்கும் அரசே இலவசமாக வழங்க முன்வருமா ?

1981 மார்ச் 24]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : உயர் நிலைப் பள்ளிகள் ஆகியவற்றுக்கு அண்மை ஆண்டுகளில் ஆண்டுதோறும் அரசுப் பணத்தில் வாங்கி அளிக்கப் பெறும் நூல்கள் புத்தகங்களில் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா வாழ்க்கை வரலாற்று நூல்கள்; அவர்களுடைய கொள்கைகள், பேச்சுக்கள் அடங்கிய நூல்கள், ஆகிய இருவகை நூல்களிலும் தேர்ந்தெடுக்கப் பட்ட நூல்கள் இடம் பெற்று வருகின்றன.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலிலிருந்து இப்படிப்பட்ட புத்தகங்கள் ஒவ்வொரு பள்ளிக்கும் கட்டாயமாக, இலவசமாக அனுப்பப்படுகிறதா என்பது தெரியவில்லை. அதை விளக்கக் கோருகிறேன். அதோடு இந்திய தேசிய தலைவர்களான திரு. காமராஜர், மகாத்மா காந்தியடிகள் ஆகியோரின் கொள்கைகளடங்கிய புத்தகங்களையும் இவ்வாறே கல்வித் துறையிலிருந்தே ஒவ்வொரு பள்ளி நூலகத்திற்கும் அனுப்பி வைப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசு உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள நூலகங்களுக்குப் புத்தகங்களை வாங்கியனுப்பும்போது, இவ்விரண்டு தலைவர்களின் புத்தகங்களையும் வாங்கியனுப்புகிறோம் என்பதைத்தான் என்னுடைய பதிலில் நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். இவைகள் அனைத்தும் அரசுப் பணத்திலிருந்து வாங்கித் தரப்படும் நூல்கள்தாம். மற்றபடி, மற்ற தலைவர்களைப்பற்றிக் குறிப்பிடும்போது, சுதந்திரத்திற்குப் பிறகு இங்கு 30 ஆண்டுக் காலம் ஆட்சி நடைபெற்றிருக்கிறது. தொடக்கத் திலிருந்து 1967 ஆம் ஆண்டுவரை காங்கிரஸ் கட்சிதான் ஆட்சியில் இருந்தது. அப்போது இதுபோன்ற நூல்களை நிறைய வாங்கித் தந்திருக்கிறார்கள். ஆனால் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்றவர்களின் நூல்கள் வாங்கித் தரப்படவில்லை. நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு தான் வாங்கித் தந்து கொண்டிருக்கிறோம்.

*** திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாணவர்களுக்கான பாடப் புத்தகங்களில் தந்தை பெரியார், அண்ணா, பாரதிதாசன், பாவாணர் போன்றோரின் வாழ்க்கை வரலாறுகள் பாடங்களாக இடம்பெற்றிருந்தனவா ? இடம் பெற்று பிறகு எவையேனும் நீக்கப்பட்டனவா ? அல்லது அவைகள் இடம்பெற வில்லை என்றால், இனியாவது அவைகளைச் சேர்ப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதுபோன்ற கேள்விகளுக்கான விரங்கள் தற்போது என்னிடம் இல்லை. ஆனால் அத்தகைய பெரியவர்களின் கருத்துக்கள் நாட்டில் பரவ வேண்டும் என்ற அடிப்படையில்தான் நாங்கள்

TRUTH ALONE TRIUMPHS

செயல்படுகிறோம். எங்களைப் போன்றவர்கள் ஆட்சிக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டதிலிருந்தே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைப் புரிந்து கொள்ளக் கூடும் என்று நினைக்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : பள்ளி நூலகங்களுக்கு இதுபோன்ற புத்தகங்கள் வாங்கியனுப்பப்படுவது வரவேற்கத் தக்கதாகும். ஆனால் இப்படிப்பட்ட பெரியவர்களின் முக்கியமான கருத்துக்கள், கொள்கைகள் அடங்கிய புத்தகங்கள் மாணவர்களிடையே முழுமையாகப் பரவ வாரத்திற்கு ஒருமுறையாவது விவாதம் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். இப்போது அப்படிப்பட்ட விவாதங்கள் நடைபெறுவதில்லை. சிந்தனை மேடை என்ற அடிப்படையில் இப்படிப்பட்ட கருத்துக்களின் மீது விவாதங்கள் நடத்தப் பட்டால், மாணவர்களிடையே ஒரு நல்ல தெளிவு ஏற்படும். எனவே இத்தகைய முறையைக் கடைப்பிடிக்க பள்ளிகளுக்கு அரசு அறிவுரை வழங்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போதே ஆசிரியர்கள் மாணவர் களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் பணியோடு மாணவர்களின் முன்னேற்றத்திற்கும் பல்வேறு வகையான அக்கறையை மேற்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில்தான் பலவகையான குழுக்களை அமைத்து வருகிறோம். அப்படி அமைக்கப்பட்ட ஒரு குழுவின் மூலம் இத்தகைய முறையைக் கடைப்பிடிக்கச் சொல்லலாம். அதோடு ஆசிரியர்களைச் சந்திக்கும்போதும், ஆசிரியர்களோடு உரையாடும்போதும் மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் ஆசிரியர்களிடத்திலேயே இது குறித்து ஒரு அக்கறையை உருவாக்க வேண்டும். அவர்களிடத்தில் இத்தகைய கருத்துக் களைச் சொன்னால், மாண்புமிகு உறுப்பினரின் யோசனை வெற்றி பெறுவதற்கான சூழ்நிலை ஏற்படும். இந்த அரசைப் பொறுத்தவரை தேவையான நடவடிக்கையை இது குறித்து மேற்கொள்ளும்.

திரு. சி. இராமலிங்கம் : சிறுவயதில் நாம் பள்ளியில் படிக்கும்போது ஜஸ்டிஸ் முத்துசாமி அய்யர் அவர்களுடைய வாலாற்றைப் பாடமாக வைத்திருந்தார்கள். அதாவது அவர் தெருவிளக்கடியில் நின்று படித்தார் என்று சொல்லப்பட்டது . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பொதுவாக உறுப்பினர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த வினா இருவரின் நூல்களைப்பற்றியது. ஆனால் அந்த இரு தலைவர்களை விடுத்து ஒரு உறுப்பினர் கல்வியையே மொத்தமாகச் சேர்த்து வினா தொடுப்பது

1981 மார்ச் 24]

இன்னொருவர் அனைத்து நூல்களையும் சேர்த்து வினா கேட்பதும் சரியல்ல. துணை வினா என்பது மூலவினாவிற்குத் தொடர்புடையதாக இருக்க வேண்டும்.

திரு. சி. இராமலிங்கம் : அதைப்போல சர் தியாகராய செட்டியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் பாடமாக வைப்பதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : வாழ்க்கையில் ஒவ்வொரு துறையிலும் சிறந்து விளங்கியவர்களின் வாழ்க்கைக் குறிப்புகளை மாணவர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதில் இந்த அரசு அக்கறை கொண்டிருக்கிறது. அதுதான் இந்த அரசின் பொதுவான நோக்கமும்கூட. புத்தகங்களை எழுதுகிறவர்களும் இதுபற்றி எழுதிக் கொண்டிருக்கிறார்கள். பள்ளி நூலகங்களுக்கு வாங்கப்படும் புத்தகங்களில் இப்படிப்பட்ட பலருடைய வாழ்க்கைக் குறிப்புகளும், கொள்கைகளும் இருப்பதைத் தடைசெய்வதில்லை. மாணவர்கள் இவைகளைப்பற்றி நன்கு தெரிந்துகொள்ள வேண்டும் என்பதில் இந்த அரசுக்கு அக்கறை இருக்கிறது.

திரு. ம. சங்கரலிங்கம் : அரசு நிதியிலிருந்து உயர் நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளிகளிலுள்ள நூலகங்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவீதத்திற்கு புத்தகங்கள் இலவசமாக வாங்கியனுப்பப்படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் வினாவிற்கு பதிலளித்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும், உயர்நிலைப் பள்ளிகளுக்கும் எவ்வளவு ரூபாய்க்கு புத்தகங்கள் அரசாங்கத்தால் இலவசமாக வாங்கிக்கொடுக்கப் படுகின்றன ? இவ்வாறு கொடுக்கப்படுவதால் இன்டர்னல் அசெஸ்மெண்ட்டுக்கு என்று 25 மார்க்கு வைத்திருப்பதால், இத்தகைய புத்தகங்களைப்பற்றிய வினாவிற்கு விடையளிப்பதற்கும் அந்த மார்க்கைச் சேர்க்க வேண்டும் என்ற நிபந்தனையை விதிக்க அரசு முன்வருமா ?

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தொடக்கப் பள்ளிகளுக்கு நூல் வாங்க 1980-81 ஆம் ஆண்டுக்கு ஒரு இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் புத்தகங்களை பள்ளிக் கல்வி இயக்குநர் வாங்கி வழங்குகிறார். உயர் நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரையில், ஆண்டுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படுகிறது. மேல் நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரையில், புதிதாகத் தொடங்கும் மேல் நிலை அரசுப் பள்ளி ஒவ்வொன்றுக்கும் ஆறு ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கப்படுகிறது. தனியார் மற்றும் நகராட்சி,

[1981 மார்ச் 24

மாநகராட்சி மேல் நிலைப் பள்ளிகளுக்கு, பள்ளி ஒன்றுக்கு 2,400 ரூபாய் என்ற வரம்புக்குட்பட்டு 40 விழுக்காடு இணை மானியம் வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு பாடத்திற்கும் மேல் நிலைப் பள்ளிகள் வாங்கத்தக்க நூலகப் புத்தகப் பட்டியல்களை வல்லுநர்களைக் கொண்டு வகுத்து பள்ளிக் கல்வி இயக்குநர் பள்ளிகளுக்கு அனுப்பி வைத்திருக்கிறார். அவற்றிலிருந்து பள்ளிகள் புத்தகங்களைத் தெரிந்தெடுத்து வாங்கலாம். இதுதான் இப்போது இருக்கின்ற திட்டம்.

இன்டர்னல் அசெஸ்மென்டைப் பொறுத்தமட்டில், இந்த யோசனையை பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தற்போதுள்ள விதிகளின் காரணமாக பெரியார், அண்ணா ஆகியவர்களுடைய நூல்களை அனைத்துப் பள்ளி களுக்கும் வாங்க முடியாத நிலை உள்ளதால், அந்த விதிகளைத் தளர்த்தி அனைத்து பள்ளிகளுக்கும் அத்தகைய புத்தகங்களை வாங்க வசதி செய்து தரப்படுமா? நூல்களை வாங்கித் தருவது மட்டுமல்லாமல், பாடத் திட்டத் திலேயே பெரியார், அண்ணா ஆகியவர்களுடைய நூல்களை இணைக்கின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அனைத்துப் பள்ளிகளுக்கும் இப்போது புத்தகங்கள் வாங்கித் தருவதில்லை. ஒதுக்கப்படுகிற பணத்திலே சில சில பள்ளிகளுக்குத்தான் வாங்கித் தருகிறோம் என்பது இங்கே தந்திருக்கிற விவரத்திலேயிருந்து தெரிய வருகிறது. பெரியார், அண்ணா போன்றவர்களுடைய கருத்துக்கள் பாடப் புத்தகங்களில் இடம் பெற வேண்டும் என்பதில் அரசுக்கு அக்கறை இருக்கிறது. அதுபற்றி அவ்வப்போது நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

பட்டதாரி ஆசிரியர்கள்.

***155 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1978 ஆம் ஆண்டில், தமிழ்நாடு தேர்வாணைக் குழுவால் தேர்ந் தெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட பட்டியலில் இடம் பெற்றுள்ள (i) முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள், (ii) பி.டி. பட்டதாரி ஆசிரியர்கள் எத்தனை பேர்?